# அறுபதாம் அகவைக்கு வாழ்த்து!

**திருமதி G. ஷீபா 06-04-2024**

அறுபதாம் அகவை தன்னை
அழகுடன் நிறைந்து ஏகி,
மறுவிலா வாழ்வின் பயனாய்
மகள்களும் அன்பில் சூழ்ந்து,
பெறுகின்ற மகிழ்வைச் சூட,
பெற்றவளுக்கு வாழ்த்து கூற,
உறவுசீர் மக்களோடு அன்பில்
உற்றதாம் நட்பை அழைத்தார்!

அணியென அன்பை சூட்டும்,
அருந்தவச் சீர் மக்களோடும்,
இணையில்லா வாழ்த்தைக் கூறும்,
இனியரில் ஒருவராகி யானும்,
பிணியிலா வாழ்வைச் சூடி,
பெருமைகொள் பெயரர்களோடு,
மணியென வாழ்ந்திருக்க இந்நாளில்
மகிழ்வுடன் வாழ்த்து வேனே!

**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!**

நட்புடன்,

**கு.ப. அசோகன்,**
மேனாள் மதிப்பீட்டு அதிகாரி,
சுங்க இல்லம், சென்னை.